சுற்றறிக்கை – 5/2019

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்,
வடக்கு மாகாண சபை.
2019.09.25

சகல கூட்டுறவுச் சங்க தலைவர்களுக்கும்,

## கூட்டுறவுச் சங்கங்களின் / இரண்டாம்படி கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளின் ஒப்பீடும் வருடாந்த வரவு செலவுத் திட்டமும்

கூட்டுறவுச் சங்கங்களின் / இரண்டாம்படி கூட்டுறவுச் சங்கங்களின் கடந்த கால செயற்பாடுகள் தொடர்பாகவும், வருடாந்த வரவுசெலவுத் திட்டம் தொடர்பாகவும் அந்தந்த கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபை அங்கத்தவர்கள் தகவல்களை அறியக்கூடிய வகையில் ஒப்பீடுகள் அறிக்கை வடிவில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். இவ்வாறான வெளிப்படுத்தல்களால் பின்வரும் நன்மைகளை அடையக்கூடியதாக அமையும்.

1. ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களாயின் சங்கத்தின் அங்கத்தவர்கள் தமது சமூக பொருளாதாக கலாச்சார தேவையை நிறைவு செய்வதற்குரிய வகையில் தங்களது கூட்டுறவுச் சங்கம் எவ்வகையான பெறுபேற்றை அடைந்துள்ளது எனவும், அவை எதிர்காலத்தில் அங்கத்தவருக்கும் அங்கத்தவரல்லாதோருக்கும் சேவை வழங்குவதற்கும் சங்க நடவடிக்கைகளை எவ்வாறு மாற்றியமைக்க வேண்டும் என்பது தொடர்பில் சிந்திப்பதற்கும், புதிய தந்திரோபாயங்களை வகுப்பதற்கும் ஏதுவாக அமையும்.

2. இரண்டாம்படி கூட்டுறவுச் சங்கங்கள் அங்கத்துவச் சங்கங்களின் சமூக பொருளாதார கலாச்சார தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு செயற்படும் நிறுவனங்களாக அமைகின்றன, எனவே இரண்டாம்படி கூட்டுறவு நிறுவனங்களின் பெறுபேறு அங்கத்துவச் சங்கங்களின் செயற்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக காணப்படுவதால் இரண்டாம்படி சங்கங்களின் ஒப்பீடு பயனானதாக அமையும்.
3. கூட்டுறவுச் சங்கங்களின் பெறுபேறு தொடர்பில் அக்கறையுள்ள அங்கத்தவர்கள் பணியாளர்கள் மற்றும் கூட்டுறவுத் திணைக்களம், மற்றும் ஏனைய தரப்பினரும் கடந்த காலத்தில் பெறப்பட்ட பெறுபேறுகளின் மாற்றங்கள் தொடர்பிலும் எதிர்காலத்தில் மாற்றப்படவேண்டிய விடயங்கள் தொடர்பிலும் தங்களது பங்களிப்பில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் தொடர்பிலும் சிந்திக்க தூண்டுவதாக இவ் ஒப்பீடுகள் அமையும்.
4. கூட்டுறவு நிறுவனங்களின் எஜமானர்கள் எனக் கருதுப்படும் அங்கத்தவர்கள் தங்களால் உருவாக்கப்பட்ட நிர்வாக அமைப்பும் பணித் தொகுதியினரும் எத்தகைய அர்ப்பணிப்பை வழங்கியுள்ளார்களென அறிந்து அதற்கான மாற்றத்தை ஏற்படுத்த வாய்ப்பு ஏற்படும் .
5. கூட்டுறவுச் சட்ட ஏற்பாடுகளுக்கமைய கூட்டுறவுச் சங்கத்தின் வரவு செலவுத்திட்டத்தை அங்கீகரிக்கும் பொறுப்பு பொதுச்சபையிடமே உள்ளது. எனவே குறித்த ஒப்பீடுகளினடிப்படையில் புதிய பிரேரணைகளை முன்வைத்து வருடாந்த வரவு செலவுத்திட்டத்தை காத்திரமானதாக்கும் நிலைமை உருவாகும்.
   எனவே இத்துடன் இணைக்கப்பட்ட மாதிரி ஒப்பீட்டுப் பட்டியல்களுக்கமைய பல்வேறு வகைப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் தமது தகவல்களை பொதுச்சபை அங்கத்தவர்களுக்கு வழங்க முடியும்.

கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்வரும் 2020 வரவு செலவுத்திட்ட நடைமுறையின் போது இதனைப் பின்பற்ற வேண்டும் என்பது எதிர்பார்க்கப்படுகின்றது. இது எமது திணைக்களத்தின் வினைத்திறனான செலாற்றுகை கணக்காய்விற்கு (Performance Auditing) பெரிதும் உதவியாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். ஒவ்வொரு வரவு செலவுத்திட்ட வருடம் ஆரம்பிப்பதற்கு முன்னர் தயாரித்து வழங்க வேண்டிய ஒப்பீடுகள் மாதிரிப் பட்டியல்கள் கொண்ட படிவம் வருமாறு :

.......................... பொதுச்சபை பிரதிநிதி அவர்களுக்கு, திகதி :-

.......................... பல.நோ.கூ.சங்கம் /பனைதென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் / கூட்டுறவுச்சபை/ சமாசம்.

1. எண்பார்வை அறிக்கையில் பெறப்பட்ட சுத்த இலாபம்

| எண்பார்வை அறிக்கையில் பெறப்பட்ட சுத்த இலாபம் | | | | |
|---|---|---|---|---|
| 2014/15 | 2015/16 | 2016/17 | 2017/18 | 2018/19 |
| | | | | |
| | | | | |

2. கிளைநிலையம், கோப் சிற்றி ஏனைய நிலையங்களின் விற்பனை/ ஏனைய விபரங்கள்

| இல | விற்பனை (ரூபா) | 2014/2015 | 2015/16 | 2016/17 | 2017/18 | 2018/19 |
|---|---|---|---|---|---|---|
| 01. | நுகர்ச்சி விற்பனை | | | | | |
| 02. | கேப் சிற்றி விற்பனை | | | | | |
| 03. | கட்டடப்பொருள் விற்பனை | | | | | |
| 04. | விவசாயப்பொருள் விற்பனை | | | | | |
| | | | | | | |

❖ கூட்டுறவுச் சங்கங்கள் தமது தொழிற்பாடுகளுக்கமைய தகவல்களை சேர்த்துக்கொள்ளலாம்.

3. பணியாளர் சோர்வு விபரம்

| இல | விபரம் | 2014/2015 | 2015/16 | 2016/17 | 2017/18 | 2018/19 |
|---|---|---|---|---|---|---|
| 01. | ஆரம்ப மீதி | | | | | |
| 02. | இவ்வருடம் | | | | | |
| 03. | மொத்தம் | | | | | |
| 04. | அறவீடு | | | | | |
| 05 | மீதி | | | | | |

4. வியாபார நடவடிக்கையின்போது செலுத்தப்பட்ட வங்கி மேலதிகப்பற்று வட்டி

| இல | விபரம் | 2014/2015 | 2015/16 | 2016/17 | 2017/18 | 2018/2019 |
|---|---|---|---|---|---|---|
| 01. | வட்டி | | | | | |
| 02. | வியாபாரத்துடனான வட்டி விகிதம் | | | | | |

5. அங்கத்தவர் தொகை

| இல | விபரம் | 2014/2015 | 2015/2016 | 2016/2017 | 2017/2018 | 2018/2019 |
|---|---|---|---|---|---|---|
| 01. | ஆரம்பம் | | | | | |
| 02. | இவ்வருடம் சோர்வு | | | | | |
| 03. | மொத்தம் | | | | | |
| 04. | இறப்பு | | | | | |
| 05 | மீதி | | | | | |

6. பணியாளர் தொகை

| இல | விபரம் | 2014/2015 | 2015/2016 | 2016/2017 | 2017/2018 | 2018/2019 |
|---|---|---|---|---|---|---|
| 01. | ஆரம்பம் | | | | | |
| 02. | இவ்வருடம் சேர்வு | | | | | |
| 03. | மொத்தம் | | | | | |
| 04. | விலகல் | | | | | |
| 05 | மீதி | | | | | |

7. வங்கி (சேமிப்பு)

| இல | விபரம் | 2014/2015 | 2015/2016 | 2016/2017 | 2017/2018 | 2018/2019 |
|---|---|---|---|---|---|---|
| 01. | அங்கத்தவர் சேமம் ஆரம்பமீதி | | | | | |
| 02. | இவ்வருடம் | | | | | |
| 03. | மொத்தம் | | | | | |
| 04. | மீளப்பெற்றது | | | | | |
| 05 | மீதி | | | | | |

8. கடன் வழங்கல்

| இல | விபரம் | 2014/2015 | 2015/2016 | 2016/2017 | 2017/2018 | 2018/2019 |
|---|---|---|---|---|---|---|
| 01. | ஆரம்ப மீதி | | | | | |
| 02. | இவ்வருடம் | | | | | |
| 03. | மொத்தம் | | | | | |
| 04. | அறவீடு | | | | | |
| 05 | மீதி | | | | | |

9. தவணை தப்பிய முற்பணங்கள் / கடன்கள்

| தொ.இ | பிரிவுகள் | 2014/2015 | 2015/2016 | 2016/2017 | 2017/2018 | 2018/2019 |
|---|---|---|---|---|---|---|
| 01 | பொதுமுற்பணம் | | | | | |
| 02 | எரிபொருள்நிலையம் | | | | | |
| 03 | நுகர்ச்சி பகுதி | | | | | |
| 04 | கிராமியவங்கி பகுதி | | | | | |

10. தற்போதுள்ள பிணக்குகள் (ஆரம்பித்த திகதி)

| இல | விபரம் | 2014/2015 | 2015/2016 | 2016/2017 | 2017/2018 | 2018/2019 |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

11. வரவுசெலவுத் திட்ட ஒப்பு நோக்கலும், பிரேரித்தலும்,

i. வருமானங்கள்

| | விடயங்கள் | 2018 திட்டம் | 2018 விளைவு | 2019 திட்டம் | 2019 விளைவு (30.09.2019)வரை | 2020 திட்டம் |
|---|---|---|---|---|---|---|
| | கிளைநிலையங்களின் வருமானம் | | | | | |
| | எரிபொருள் நிலையங்களின் வருமானம் | | | | | |
| | கிராமிய வங்கிகளின் வருமானம் | | | | | |
| | ஏனைய பகுதிகள் | | | | | |
| | | | | | | |

❖ - கூட்டுறவுச் சங்கங்கள் தமது தொழிற்பாடுகளுக்கமைய தகவல்களை சேர்த்துக்கொள்ளலாம்.

ii . செலவீனங்கள்

| | விடயங்கள் | 2018 திட்டம் | 2018 விளைவு | 2019 திட்டம் | 2019 விளைவு (30.09.2019)வரை | 2020 திட்டம் |
|---|---|---|---|---|---|---|
| | நிலைய நிர்வாக செலவு | | | | | |
| | விற்பனை வினியோக செலவு | | | | | |
| | நிதிச்செலவு | | | | | |
| | ஏனைய செலவு | | | | | |
| | | | | | | |

நன்றி

| ...................... | ......................... | .................... | ........................... |
|---|---|---|---|
| தலைவர் | பொதுமுகாமையாளர் | கணக்காளர் | உள்ளக கணக்காய்வாளர் |

இந் நடைமுறையை பின்பற்றுவதனூடாக சிறந்த வினைத்திறனுள்ள சேவையை கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கு வழங்க முடியுமாகையால் தங்களது பூரண ஒத்துழைப்பை நல்கி உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பொ.வாகீசன்,
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்,
வடக்கு மாகாண சபை.

பொ.வாகீசன்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்
வட மாகாணம்

பிரதி -1. கூட்டுறவு அபிவிருத்தி உதவிஆணையாளர் - யாழ்ப்பாணம்/கிளிநொச்சி/முல்லைத்தீவு/வவுனியா/மன்னார்.

2. பணிப்பாளர் கூட்டுறவுப்பயிற்சி நிறுவனம் - வவுனியா